



# Voice of Jagadguru



advaitam paramanandam

an e-magazine on advaita

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## அருள் மொழிகள்



பக்தியோடு பகவானைப் பூஜிப்பது முக்கியமானது. அதாவது பக்தியுடன் எனக்கு இலை, புஷ்பம், பழம் அல்லது தண்ணீரையும் எவனொருவன் சமர்ப்பித்தாலும் அதை எனது பூஜா சாமக்ரியை போல் நான் ஏற்றுக்கொள்கிறேன் என்று பகவான் சொல்கிறார்.

ஒருவன் தனக்கு விதிக்கப்பட்டிருக்கிற தர்மத்தை அனுஷ்டித்தால் போதும், தனக்கு குறிப்பிடப்படாத வேறெந்த தர்மத்தையும் கடைப்பிடிக்க அவசியம் இல்லை. அப்படிப்பட்டதை அனுஷ்டித்தாலும் அது பயனற்றது.

—ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹா ஸ்வாமிகள்

## सुभाषितानि
## நல்லுரைகள்

अकाण्ड पातोपनता कं न लक्ष्मीर्विमोहयेत् । அகாண்ட³ பாதோபனதா கம்' ந லக்ஷ்மீர்விமோஹயேத் | = திடீரெனக் குவிந்த செல்வம் யாரைமயக்காது?

अकारणाविष्कृत वैरदारुणाः दुर्हदः । அகாரணாவிஷ்க்ரு'த வைரதா³ருணாঃ து³ர்ஹத³ঃ | = கெட்ட எண்ண முள்ளவர் காரணமின்றி விரோதம் காட்டிக் கொடுஞ் செயல் புரிவர்.

अकार्यं अश्रद्धेयं परमर्म च न भाषेत । அகார்யம்' அஶ்ரத்³தே⁴யம்' பரமர்ம ச ந பா⁴ஷேத = தகாத செயல், நம்பத்தகாத செய்தி, பிறரது ரகசியம் இவற்றை வெளியிடாதே.

Our Mail ID : Info@voiceofjagadguru.com

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## விதுர நீதி

षड्दोषाः पुरुषेणेह हातव्या भूतिमिच्छता ।
निद्रा तन्द्रा भयं क्रोधः आलस्यं दीर्घसूत्रता ।।

ஷட்³தோ³ஷா: புருஷேணேஹ ஹாதவ்யா பூ⁴திமிச்ச²தா ।
நித்³ரா தந்த்³ரா ப⁴யம்' க்ரோத⁴: ஆலஸ்யம்' தீ³ர்க⁴ஸூத்ரதா ..



ஸம்பத்தை விரும்புகின்ற மனிதன்,அதிக நித்ரை (தூக்கம்), சோம்பல், பயம், கோபம், முயற்சி செய்யாமலிருப்பது, காரியத்தை தாமதமாகச் செய்வது என்ற இந்த ஆறு தோஷங்களையும் விட்டுவிட வேண்டும்

षडिमान्पुरुषो जह्यात् भिन्नां नावमिवार्णवे ।
अप्रवक्तारमाचार्यं अनधीयानमृत्विजम् ॥
अरक्षितारं राजानं भार्यां चाप्रियवादिनीम्
ग्रामकामं च गोपालं वनकामं च नापितम् ।।

ஷடி³மான்புருஷோ ஜஹ்யாத் பி⁴ன்னாம்' நாவமிவார்ணவே ।
அப்ரவக்தாரமாசார்யம்' அனதீ⁴யானம்ருத்விஜம் ॥
அரக்ஷிதாரம்' ராஜானம்' பா⁴ர்யாம்' சாப்ரியவாதி³னீம்
க்³ராமகாமம்' ச கோ³பாலம்' வனகாமம்' ச நாபிதம் ..

கல்வியை நன்கு சொல்லிக் கொடுக்காத ஆசார்யனையும், வேத மந்திரங்களை நன்கு ஆவ்ருத்தி செய்யாத ரித்விக்கையும், பாதுகாக்காத அரசனையும், அப்ரியமாகப் பேசும் மனைவியையும், பசுக்களை திடல்களில் மேயவிட்டு தெருவில் வந்து திரியும் மாடு மேய்ப்பவனையும், தெருவில் சஞ்சரிக்காமல் காட்டிற்குச் செல்லும் க்ஷவரகனையும். மனிதன் உடைந்த தோணியை ஸமுத்ரத்தில் தள்ளுவது போல் விட்டு விட வேண்டும்.

षडेवतु गुणाः पुंसा नहातव्याः कदाचन ।
सत्यं दानं अनालास्यं अनसूया क्षमा धृतिः ।।

ஷடே³வது கு³ணா: பும்'ஸா நஹாதவ்யா: கதா³சன ।
ஸத்யம்' தா³னம்' அனாலாஸ்யம்' அனஸூயா க்ஷமா த்⁴ரு'தி: ..

மனிதன் ஸத்யம், தானம் ,சோம்பலின்மை, பொறாமை இல்லாமை, பொறுமை, தைர்யம், ஆகிய ஆறு குணங்களையும் ஒரு பொழுதும் விட்டு விடக்கூடாது.

(தொடரும்....)

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஆசார்யாளின் உபதேசங்கள்

(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாசஸ்வாமிகள் அருளியது)

### திருப்தி உடையவனே பாக்கியசாலி

ஒருவனுக்குத் தெரியாத விஷயத்தைச் சுலபமாக அவனுக்குத்



தெரியப்படுத்தலாம். ஆனால், ஒருவன் வேண்டுமென்றே தனக்குத் தெரியும் விஷயத்தை லட்சியம் செய்வதில்லை என்றால் அந்த நிலையே வேறு. பிராயச்சித்தங்கள் பல சொல்லப்பட்டிருக்கின்றன. எதற்காக? அறியாமல் செய்யும் தவறுகளுக்காக. வேண்டுமென்றே மீண்டும் மீண்டும் செய்யும் தவறுகளுக்கு என்ன பிராயச்சித்தம் சொல்ல முடியும்?

ப்ராயச்சித்தம் ஸக்ருதுபனதே வா ப்ரமாதாத்க்ருதே வா |
பூயோ பூயோப்யவஹிததரை: ஸாதிதே க: ஸமாதி: ||

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

"மீண்டும் மீண்டும் தவறிழைப்பவனுக்கு என்ன பிராயச்சித்தம்?" ஆகவே ஆசைகள் கஷ்டத்தை பலனாகக் கொடுக்கின்றன என்று ஒருவன் அறிந்து விட்டானேயானால், பகுத்தறிந்து பார்ப்பது ஒன்றுதான் ஒருவன் திருந்த ஒரே வழியாகும். ஆகவே, ஒருவன் தரித்ரனாகிவிடக் கூடாது என்று விரும்பினால். அவன் விஷயங்களுக்கு ஆசைப்படக் கூடாது. தான் எதைப் பெறுகிறானோ அதிலேயே திருப்தியடைய வேண்டும். பகவத்பாதாள், விதிவசாத் ப்ராப்தேன ஸந்துஷ்யதாம் (விதிவசத்தால் என்ன கிடைக்கப் பெறுகிறாயோ அதிலேயே திருப்தியடை) என்று கூறியிருக்கிறார். நமக்கு எது கிடைக்க வேண்டுமோ அது கிடைத்தே தீரும். விதியின் வலிமை அத்தகையது. நாம் ஆளரவமற்ற கானகத்தில் இருந்தாலும் அவ்வாறே நடக்கும்.

த்வீபாதன்யஸ்மாதபி மத்யாதபி ஜலநிதேர்திசோப்யந்தாத் |
ஆனிய ஜடிதி கடயதி விதிரபிமதமபிமுமகீபூத: 11

"இரு பொருட்கள் ஒன்று சேர வேண்டும் என்று இருந்தால், அவை வெவ்வேறு தீவுகளிலிருந்தாலும் கடலின் வயிற்றில் இருந்தாலும் நெடுந்தொலைவிலிருந்தாலும் விதியானது அவற்றை ஒன்று சேர்க்கிறது."

பரீக்ஷித், பாம்புக் கடியினால் இறக்க வேண்டும் என்று இருந்தது. இதைத் தவிர்ப்பதற்காக அவர் கடலின் நடுவே அமைந்த இருப்பிடத்தின் மேல் பகுதிக்குச் சென்றார். அந்த இடம் பாம்புகள் வர முடியாத இடமாக இருந்தபோதும், அவர் சாகவிருந்த அன்றே ஒரு பாம்பு கடித்து இறந்து போனார். விதியின் பாதையை அவரால் மாற்ற முடியவில்லை. குசேலரின் ஏழ்மை, இரக்கத்தால் அனைவரும் கண்ணீர் வடிக்கும் வண்ணம் இருந்தது. விதி அவரை கிருஷ்ணரிடம் இட்டுச் சென்றது. கிருஷ்ணர், குசேலர் தன் துணியில் முடிந்து கொண்டுவந்த அவலில் கொஞ்சம் சாப்பிட்டார். அவ்வளவுதான். அதன் பலனாக குசேலர் குபேரனைப் போல் மிகுந்த செல்வம் வாய்க்கப் பெற்றவரானார். குசேலரைப் போன்ற நிலையிலிருந்து எவ்வாறு குபேரனைப் போல செல்வந்தனாக முடியும் என்பது கற்பனை செய்வதற்கே கடினமாக உள்ளது. ஆனால், விதி இதையும் செய்ய வல்லது. இந்த விவரங்களை நாம் பாகவதத்திலேயே பார்க்கலாம். இதன் காரணமாக, பகவத்பாதாள். "விதியின் மூலம் எது கிடைக்கிறதோ அதை வைத்துக்கொண்டு திருப்தியோடிரு" என்று கூறிய அறிவுரை நமக்கு மனவமைதியைத் தருகிறது. செல்வமும் அதிகாரமும் வாய்ந்தவர்களாகச் சிலர் இருந்தாலும், ஆசைகளை அழிக்காவிட்டால் துன்பம் அடைகிறார்கள். இதை நாம் நேரடியாகவே பார்க்கிறோம். ஆகவே நாம் ஆசைகளுக்கு இடங்கொடுக்காமல், பகவத்பாதாளின் புனிதமான உபதேசங்களின்படி நடந்து, வாழ்க்கையின் குறிக்கோளை அடைய வேண்டும்.

ஹர நம: பார்வதி பதயே ஹர ஹர மஹாதேவ ||
ஜானகீகாந்தஸ்மரணம் | ஜய ஜய ராம ராம |

(தொடரும் .....)

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஸ்ரீ ஸூக்தம்

11. கர்தம முனிவரே ! உமக்கு மகளாகப் பிறந்த மகாலட்சுமி என்னிடம் வர வேண்டும், தாமரை மாலை அணித்தள்ளும், செல்வத்தின் தலைவியும், அன்னையும் ஆகிய அவளை என் குலத்தில் தங்கச் செய்ய வேண்டும்!



12. திருமகளின் மகனான சிக்லீதரே! தண்ணீர் நல்ல உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யட்டும். என் வீட்டில் நீங்கள் வசிக்க வேண்டும். தேவியும் உமது அன்னையுமான திருமகளை என் குலத்தில் வாழும்படி அருளவேண்டும்!

13. அக்கினி தேவனே! கருணை மனத்தவளும், தாமரையில் உறைபவளும், உலகை உணவூட்டி வளர்ப்பவளும் குங்கும நிறத்தினளும், தாமரை மாலை அணிந்தவளும் பொன்மயமானவளுமான மகாலட்சுமியை என்னிடம் எழும்தருளச் செய்ய வேண்டும்!

14. அக்கினி தேவனே! சுருணை மனத்தவளும், கம்பீயானவளும், செங்கோல் ஏந்தியவளும், அழகிய நிறத்தவளும். சூரியனைப்போல் பிரகாசிப்பவளும், பொன்மயமானவளுமான மகா லட்சுளியை என்னிடம் எழுத்தருளச் செய்ய வேண்டு!

15. அக்கினி தேவனே ! யாரால் ஏராளமான பொன்னும், பசுக்களும், பணிப்பெண்களும், குதிரைகளும், ஆட்களும் தான் பெறுவேனோ அந்தத் திருமகள் என்னை விட்டு விலகாதிருக்குமாறு செய்தருள வேண்டும்.

தொடரும் .....

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## என்றும் புதியவர்

### ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள்

### 2. பேரறிவு (மஹாப்ரக்ஞை)

"... ஆசார்யாள் அடிக்கடி நரஸிம்ம வனத்தில் உள்ள வயற்பரப்புக்குச் சென்று அங்கே நடக்கும் பணிகளை மேற்பார்வையிடுவது வழக்கம். அவருடைய கண்களிலிருந்து எதுவும் தப்பாது ! ஒரு நாள் நான் அந்த பக்கம் நடந்து செல்லும் போது, எதிர்ப்பக்கம் ஒரு சிறிய டிராக்டர் வண்டி வந்தது. அந்த வண்டியின் பின்சக்கரத்திற்கு அருகில் ஒருவர் வசதியாக நிற்குமாறு மேடை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அதில் ஆசார்யாள் நின்றிருந்தார். அதைக் கண்டு நான் வியப்படைந்தேன். என்னைப் பார்த்தவுடன், ஆசார்யாள் வண்டியை நிறுத்துமாறு கூறி என்னை அருகில் கூப்பிட்டார். நான் அவர் அருகில் சென்றவுடன், அவர் நின்றிருந்த மேடையில் குவித்திருந்த பழங்களிலிருந்து இரண்டு சப்போட்டா பழங்களை எனக்குத் தந்து, "இதைச் சாப்பிடு. நம் தோட்டத்தில் விளைந்தவை, சுவையாக இருக்கும்" என்றார். என்னுடன் பேசும் சமயத்தில் அவர் கண்கள் எல்லாத் திசைகளையும் கவனித்தன. திடீரென அவர் ஒரு பக்கம் பார்த்து, "டேய், யாரடா அங்கே" என்று சத்தம் போட்டார். உடனே, சற்றுத் தொலைவிலிருந்த மரம் ஒன்றிலிருந்து ஒருவன் கீழே குதித்து ஒரே ஓட்டமாக ஓடிவிட்டான்..."



மேலே கூறிய நான்கு நிகழ்வுகளில் ஆசார்யாளின் வெவ்வேறு பரிமாணங்களைக் காண்கிறோம். முதல் சம்பவம் ஆசார்யாள் தோட்டக்கலையை நன்கு அறிந்தவர் என்று கூறுகிறது. இரண்டாவதில் இளம் பிரம்மசாரி ஒருவனுக்கு ஆன்மிக நெறியைக் காட்டும் குருவாக ஆசார்யாளைப் பார்க்கிறோம். மூன்றாவது நிகழ்வில் குறிப்பிடப்படும் லெக்கெட் என்ற மேனாட்டவர் வேதாந்த சாஸ்திரம் கற்றவர். சங்கர பகவத்பாதரால் இயற்றப்பட்டதாகக் கருதப்படும் அத்யாத்ம படல உரை (ஆபஸ்தம்ப சூத்திரத்தில் காணப்படும் அத்யாயம் ஒன்றின் உரை), மற்றும் யோக சூத்திர விவரணம் என்ற நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டவர்; இவற்றின் முகவுரையில் அவர் ஆசார்யாளுக்கு நன்றி கூறுகிறார் (புத்தகங்களின் முதற் பக்கத்தில் ஆசார்யாளின் நிழற்படம் ஒன்றும் இடம் பெறுகிறது). அவர்

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

நூலாராய்ச்சி சம்பந்தமாக ஆசார்யாளிடம் பலமுறை உரையாடியிருக்கிறார் என்று தெரிய வருகிறது. இப்படிப்பட்டவரை ஆசார்யாள் வரவேற்று உரையாட அழைத்துச் செல்லும் போது, ஆசார்யாளை நாம் சாஸ்திரப் புலமை வாய்ந்தவராகக் காண்கிறோம். நான்காவது நிகழ்வில் ஆசார்யாளைக் கவனம் தப்பாத பணி மேலாளராகக் காண்கிறோம். இம்மாதிரியான பல பரிமாணங்கள் கொண்ட ஆசார்யாளின் ஆளுமையையே நாம் இக்கட்டுரையின் துவக்கத்தில் பன்முகத் தன்மை கொண்டது என்று கூறினோம். இந்த இயலில், ஆசார்யாளின் பன்முகத் தன்மை கொண்ட ஆளுமைக்கும் "महाप्रज्ञम्" என்ற சொற்றொடருக்கும் என்ன தொடர்பு என்பதை விரிவாகக் கூறுவோம். சுலோகத்தில் "प्रज्ञा" என்ற சொல்லிற்கு வழக்கில் “அறிவாற்றல்” என்று பொருள். “महा” என்பது மேன்மை குறித்து வரும் சிறப்பு அடைமொழி. "महाप्रज्ञ:" என்பது ஆகுபெயராய் “பேரறிவாற்றல் கொண்டவர்” என்று பொருள் தருகிறது (“महाप्रज्ञम्” என்பது இரண்டாம் வேற்றுமை).

மஹாப்ரக்ஞை - கல்விசார் அறிவாற்றல்

மனிதர்களின் அறிவாற்றல் பல விதங்களில் வெளிப்பட்டாலும், கல்வியறிவினால் வரும் ஆற்றல் இதில் முக்கியமாகக் கருதப்படுகிறது. பாரத கலாசாரம் மட்டுமின்றி உலகத்தின் பல்வேறு கலாசாரங்களிலும் கல்வியறிவு மிகவும் போற்றப்படுகிறது. எனவே கல்வியறிவு சார்ந்த அறிவாற்றல் ஆசார்யாளிடம் எவ்வெந்த விதங்களில் வெளிப்பட்டது என்பதை முதலில் பார்ப்போம்.

பொதுவாகக், கல்வியறிவு இரண்டு விதங்களில் வெளிப்படுகிறது. முதலாவது, தமக்கு ஒத்த கல்வியறிவு கொண்டவரால் அவர்களுக்கு நிகரானவராகவோ அல்லது சிறந்தவராகவோ ஏற்கப்படுவது; இரண்டாவது, தாம் கற்றதைப் பிறருக்குக் கற்பிப்பது. பாரதம் உள்ளிட்ட எல்லாப் பண்டைய கலாசாரங்களிலும் ஒருவரின் கல்வியறிவு இந்த இரண்டைக் கொண்டே தீர்மானிக்கப்படுகிறது. ஏனென்றால், தாம் கற்றதை மற்றோருக்கு விரித்துரைக்கும் போது அதைச் செவிகொடுத்துக் கேட்போர் பல கேள்விகளை எழுப்புவர். அதற்கு விடையளிக்க முற்படும் போது, நாம் கற்றது முன்னை விடச் சிறப்பாக நம் மனதில் விளங்குகிறது. மேலும் ஒரு சில சமயங்களில், அக்கேள்விகள் இதுவரை அறியப்படாத புதிய கருத்துகளும் கொள்கைகளும் உருவாக வழிவகுத்து, நம் அறிவை மேம்படுத்துகின்றன. இதனாலேயே வள்ளுவரும் கற்பிப்பது, கற்றார் முன் விரித்துரைப்பது என்ற இவ்விரண்டு கூறுகளையும் திருக்குறளில் சிறப்பித்துக் கூறுகிறார்:

(தொடரும்…..) மிக்க நன்றி : Centre for Brahmavidya

ஸத் ஸம்ப்ரதாயம்
An Unit of the e magazine Voice of Jagadguru)

## நீதி மஞ்ஜரீ
### ஸ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள் இயற்றியது.

அத்தியாயம் - 4



ஆசாரம்

எவ்வித தீண்டாமையும் நம் தேசத்திலிருக்கக் கூடாதென்று சட்டம் போட்டவர்களின் நோக்கம் நிறைவேறிற்றா இல்லையா என்பது வேறு விஷயம். விழுப்பு, எச்சில், தீட்டு என்கிற தீண்டாமை வரவர குறைந்து வருகிறது நிச்சயம், குழந்தைகள் முதல் பெரியோர் வரை சட்டையும் கால்சட்டையும் போடவாரம்பித்த பிறகு விழுப்பு ஏது? வண்ணான் வெளுத்துவந்த உடுப்புகளை அப்படியே புருஷர்களும் பெண்டுகளும் உபயோகிக்க ஆரம்பித்த பிறகு விழுப்பு ஏது? வண்ணான் மடி என்றே பெயர் வைத்து விட்டார்கள். சிறு குழந்தைகள் வாயில் விரல் போட்டுச் சப்புவதுண்டு. இப்பொழுதோ பெரியவர்கள் கூட விரலையோ, நகத்தையோ, பென்சிலையோ, பேனாவையோ கடித்த வண்ணம் இருக்கிறார்கள். அதுவும் ஏதேனும் முக்கிய விஷயம் ஆலோசிக்க வேண்டுமானால் வாயில் இவை ஏதேனும் இருந்தால்தான் யோஜனையே செய்ய முடிகிறது. பள்ளிக்கூடத்திற்கு போகும் ஸஹவாஸ தோஷத்தால் சட்டையும் பாவாடையையும் கடிப்பதோடு இராமல், பெரிய பெண்டுகளே சேலைத்தலைப்பு அல்லது கைக்குட்டையை கடித்துக்கொண்டிருந்தால்தான் நாகரீகம் என்று எண்ணுகிறார்கள். எச்சிலாக்காமல் தீர்த்தம் சாப்பிடும் வழக்கம் குறைந்து வருகிறது. எச்சில் செய்து சாப்பிட்டால்தான் காபி முதலானவைகளுக்கு ருசி என்ற பிரஸித்தியும் ஏற்பட்டுவிட்டது.

நின்றபடியே இடது கையில் தின்பண்டத்தையோ பழத்தையோ வேறு வைத்துகொண்டு வாயால் கவ்விக கடித்துத்தின்பதும் இடது கையாலாயே பானங்கள் அருந்துவதும் வெகு ஸாதாரணமாகி விட்டன. சாப்பாட்டுக் கிளப்புகளில் எல்லா ஜாதியார்களுடைய எச்சிலும் சேருவது பிரத்யக்ஷம் பஸ்ஸில் ஏறினால், கடையில் ஸாமான் வாங்கினால், பஸ்காரன் கடைக்காரன் எச்சிலைத் தடவித்தான் டிக்கட்டோ ரசீதோ கொடுக்கிறான். மிருகங்களுக்கு எச்சில் தோஷம் பார்க்கிறோமாவென்று நாம் ஸமாதானப்படுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. சில காலமாக சிலேட் துடைக்க குழந்தைகளும், லேபிள்

## ஸத் ஸம்ப்ரதாயம்


An Unit of the e magazine Voice of Jagadguru)

ஒட்ட பெரியவர்களும், எச்சிலை உபயோகப்படுத்தலாமென்பதை கண்டுபிடித்திருக்கிறார்கள். தீட்டு என்பதே என்னவென்று கேட்கும் காலம் வந்திருக்கிறது. ஜனனாசௌசம், மரணாசௌசம் அனுஷ்டிப்பதும் குறைந்து வருகிறது. பஹிஷ்டையாயிருக்கும் பெண்களை பள்ளிக்கூடம் அனுப்புவதும் அங்கே பஹிஷ்டையாயிருக்கும் உபாத்யாயினீகளுடனும் பெண்களுடனும் கலந்து அவர்கள் தீட்டையும் நம் வீட்டிற்கு சமயலறை பூஜாக்ருஹம் வரை கொண்டு வருவதும் மிகவும் ஸஹஜமாகிவிட்டது. மேற்கு தேசத்தில் கூட பஹிஷ்டா ஸ்த்ரீகள் புஷ்பச் செடிகளைத் தொடக்கூடாதென்றும், அந்த ஸமயத்தில் மீனோடாக்ஸின் என்ற ஒருவித விஷஸத்து வெளியாவதாகவும் கண்டுபிடித்திருக்கிறார்கள். பார்யை கர்ப்பிணியானால் பர்த்தாவிற்கும், மாதாபிதாக்கள் இறந்தால் புத்திரனுக்கு ஒருவருஷம் வரையிலும், ஒருவித அசுத்தமேற்படுவதால் தீக்ஷை அவசியமென்று நம் சாஸ்திரங்கள் சொல்லும்போது, பிரத்யக்ஷமாக அசுத்தம் என்று தெரிகிற விஷயத்தில்கூட நாம் அறுவெறுப்பு வைத்துக் கொள்ளவில்லையானால் நாம் எவ்வளவு தூரம் கெட்டிருக்கிறோம் என்பதைத்தான் காட்டுகிறது.

இதெல்லாம் மஹத்தான தோஷம் என்பதே ஜனங்களுக்கு தோன்றவிடாமல் கலி முற்றி வருகிறது. இவ்விததுராசாரங்கள் எல்லாம் பிரதிகிருஹமும் வியாபிக்க ஆரம்பித்த பிற்பாடு பிராஹ்மண்யம் நம்மிடம் தங்கவில்லையென்பதில் ஆச்சர்யமில்லை. நன்கு வேதாத்யயனம் பண்ணியிருந்தால் கூட ஆசாரமில்லாமல் போனால் அவன் பரிசுத்தனாகமாட்டான். आचारहीनं न पुनन्ति वेदा: என்று சொல்லப்பட்டிருக்கிற நிலமையில் வேதாத்யயன கந்தமேயில்லாமல் துராசார பூயிஷ்டர்களாயிருப்பவர்களிடம் பிராஹ்மணியம் எப்படி தங்க முடியும்? அனாதிகாலமாக நம் முன்னோர்கள் பெரிய தனமாக பாவித்து வெகு ஜாக்கிரதையாக நம் வரை காப்பாற்றிக் கொடுத்திருக்கும் இந்த பிராஹ்மண்யத்தை நாம் திரஸ்கரித்து வந்தால் இனி ஏற்படக்கூடிய ஜன்மாவில் நமக்கு பிராஹ்மண்யம் கிடைக்குமென்று எதிர்பார்க்க கொஞ்சமேனும் நியாயம் கிடையாது. பிராஹ்மணயம் இருக்கக்கூடாதென்றுதான் பிராஹ்மணப் பெண்கள் விருஷளீயான பிறகுதான் விவாஹம் செய்யவேண்டுமென்ற நிர்பந்தச் சட்டம் வந்திருக்கிறது போலும். இப்படி விருஷளீ விவாஹம் ஏற்படுவதுபோல். முதல் ஸம்ஸ்காரமான கர்ப்பாதான ஸம்ஸ்காரம் அனேகமாய் லோபத்தை அடைந்துவிட்டது. ஸீமந்தாதி அனுஷ்டானமும் குறைந்துவிட்டது.

(தொடரும் ...)


மிக்க நன்றி : ஸ்ரீ ஞானானந்த பாரதீ க்ரந்த ப்ரகாசன ஸமிதி



# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ||श्रीशारदास्तोत्रम्||

### श्रीशृङ्गाद्रौ श्रीशारदानवरात्रोत्सवसमये

### ஶ்ரீஶாரதா³ஸ்தோத்ரம்

### (ஶ்ரீ சிருங்க கிரியில் சாரதாநவராத்திரியின்போது)

(ஶ்ரீ சிருங்ககிரி ஶ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஶ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகள் இயற்றியது)

कर्तुमात्मनि सार्थां किं वृषेन्द्रः पुर एतु नः ।
इत्यादिकां श्रुतिं वाणि पुरस्तात्कुरुषे वृषम् ||16||




கர்துமாத்மனி ஸார்தா²ம்’ கிம்’ வ்ரு’ஷேந்த்³ர: புர ஏது ந: .
இத்யாதி³காம்’ ஶ்ருதிம்’ வாணி புரஸ்தாத்குருஷே வ்ரு’ஷம் ||16||

வாணி ! வ்ருஷேந்த்ர: புர ஏதுந: (வ்ருஷாவான இந்திரன் நம்முன் செல்லட்டும்) என்ற வேதவாக்யம் பொருளுள்ளதாக்கவென்றே விருஷபத்தை (வாஹனமாக) முன்னே காட்டுகிறாயோ? (16)

वृषभो वृषभो नो चेत्कथं तव पदाम्बुजम् ।
वाणि सेवितुमर्हः स्यात्तस्माद्वृषभ एव हि ||17||


வ்ரு’ஷபோ⁴ வ்ரு’ஷபோ⁴ நோ சேத்கத²ம்’ தவ பதா³ம்பு³ஜம் .
வாணி ஸேவிதுமர்ஹ: ஸ்யாத்தஸ்மாத்³வ்ரு’ஷப⁴ ஏவ ஹி ||17||

வாணி! விருஷபம் (காளை) விருஷபமாக (செயலாற்றலில் சிறந்ததாக) இல்லாவிடில் அது உன் சரண ஸேவைக்கான தகுதி பெற்றதாக எப்படி ஆகும்? அதனால் அத்தகுதி பெற்றுள்ளதே.(17)


वृषं पुरस्तात्कुरुषे किमद्य वृषप्रदानाय नमज्जनेभ्यः ।
द्रुतं पयोजन्मभवप्रमोदपयोधिराकाशशिबिम्बपङ्क्ते ||18||

வ்ரு’ஷம்’ புரஸ்தாத்குருஷே கிமத்³ய வ்ரு’ஷப்ரதா³னாய நமஜ்ஜனேப்⁴ய: .
த்³ருதம்’ பயோஜன்மப⁴வப்ரமோத³பயோதி⁴ராகாஶஶிபி³ம்ப³பங்க்தே ||18||

தாமரையில் தோன்றிய பிரும்மாவின் ஆனந்தக் கடலைக் கொந்தளிக்கச் செய்கிற பௌர்ணமீ சந்திர பிம்பங்களான தேவியே! தன்னை வணங்குவருக்கு விருஷத்தை (புண்ணியத்தை) அளிப்பதற்காகவே, விருஷத்தை (காளையை) இன்று முன் நிறுத்தியுள்ளாயோ? (18) (தொடரும் ...)



# Voice of Jagadguru



advaitam paramanandam — an e-magazine on advaita

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஸ்ரீமத் அத்யாத்ம ராமாயணம்

### ஸ்ரீஜானகீ ஜீவனாஷ்டகம்

1. எந்தக் குழந்தையின் பெற்றோர்கள், மிகவும் மனத்தைக் கவரும் பாலலீலைகளைக் கண்டு, தம்மைப் பெரும்பேறு பெற்றவர்களாகவும், வாழ்க்கைப் பயனை அடைந்து விட்டவர்களாகவும் தம்மைக் கருதிக் கொண்டார்களோ (எந்தக் குழந்தை தன் தெய்வீக அழகினால்), மன்மதனின் செருக்கை அபகரித்ததோ, அப்படிப்பட்ட சேய் வடிவினதாகிய ஸ்ரீஜானகிதேவியின் வாழ்வாதாரப் பொருளை நான் வணங்குகிறேன்.



2. மன்னர் (தன் வாயால்) போகச் சொல்லவில்லை; என்றாலும், அவரிடமிருந்து அனுமதி பெற்றுவிட்டதாகக் கூறப்பட்டவுடனேயே காட்டுக்குச் சென்றார். மகிழ்ச்சியும் துயரமும் அற்றவராக லீலை புரிந்த ஸ்ரீஜானகீதேவியின் வாழ்வாதாரப் பொருளை நான் வணங்குகிறேன்.

3. ஜடாயுவின் மிக்க இரங்கத்தக்க நிலையைக் கண்டதும், தன் மனைவியின் பிரிவினால் ஏற்பட்ட சோகத்தை மறந்தவரும், ஈர நெஞ்சமுடையவருமான ஸ்ரீஜானகீதேவியின் வாழ்வாதாரப் பொருளை நான் வணங்குகிறேன்.

4. தன்னுடைய சொந்தத் துயரங்களால் உள்ளம் வெந்து போயிருந்தாலும், வாலியினால் (தாக்கப்பட்டு) பலமிழந்து கிடந்த சுக்ரீவனை, வானரர்களின் அரசனாகப் பதவியில் அமர்த்திய ஸ்ரீஜானகீதேவியின் வாழ்வாதாரப் பொருளை நான் வணங்குகிறேன்.

5. விதேக மன்னனின் புதல்வியாகிய சீதை, எவரைத் தியானித்துக் கொண்டேயிருந்து, (கணவரிடமிருந்து) பிரிவு என்னும் நெருப்பைப் போக்கிக் கொண்டு, தவச்சீலர்களின் எதிரியினுடைய (அசோக) வனத்தில் தன் உயிரைத் தாங்கிக் கொண்டிருந்தாளோ, எவர் அவளுடைய உயிருக்கு உயிரானவரோ, அந்த (ஸ்ரீராமனான) ஸ்ரீஜானகீதேவியின் வாழ்வாதாரப் பொருளை நான் வணங்குகிறேன்.

6. எவருடைய, பேராற்றல் என்னும் பெருங்கடலில் வீசிய அலைவரிசைகளில் அகப்பட்டு. விச்ரவஸின் வழித் தோன்றல் (இராவணன்), அந்தோ!, தன் குலத்தோடு அழிந்து போனானோ, எவர். எதிரிகளை அழிப்பதை லீலையாகச்

செய்தாரோ அந்த ஸ்ரீஜானகீதேவியின் வாழ்வாதாரப் பொருளை நான் வணங்குகிறேன்.

7. எவருடைய முழுநிலவு போன்ற தோற்றப் பொலிவு என்னும் ஒளிக் கதிர்களால், ராஜலட்சுமி பிரகாசித்தாளோ, எவர் தவச் செல்வர்களாலும் இந்திரனாலும் வணங்கத் தக்கவரோ, அந்த ஸ்ரீஜானகீதேவியின் வாழ்வாதாரப் பொருளை நான் வணங்குகிறேன்.

8. இவ்விதம் மாயையால் மனிதனாகத் தோன்றி மன்னராக வேடம் புனைந்து, விசித்திரமான லீலைகள் புரிந்தவரும், முனிவர்களின் மனம் (என்னும் தாமரையை) நாடும் அன்னம் போன்றவருமான ஸ்ரீஜானகீதேவியின் வாழ்வாதாரப் பொருளை நான் வணங்குகிறேன்.

## அத்யாத்ம ராமாயணத்தின் பெருமையும் பயனும்

பிரத்யட்சம் முதலான பிரமாணங்களுக்கு அப்பாற்பட்டவராகவும் முக்குணங்களைக் கடந்தவராகவும் மாசற்றவராகவும் ஞானவடிவினராகவும் மனம்-வாக்குகளால் சுட்டிக் காட்ட முடியாதவருமாக விளங்கும் பகவான் தட்சிணாமூர்த்திக்கு நமஸ்காரம்.

ஸூதர் சொன்னது: மற்றவர்களுக்கு உபகாரம் செய்வதில் விருப்பமுடைய யோகியான நாரதர், ஒருசமயம். எல்லா உலகங்களையும் சுற்றிவிட்டு ஸத்யலோகத்தை வந்தடைந்தார்.

அங்கே, வடிவத்தோடு விளங்கும் வேதங்களால் சூழப்பட்டு, இளஞ்சூரியனைப் போன்ற ஒளியினால் சபாமண்டபத்தை நன்றாகப் பிரகாசிக்கச் செய்துகொண்டு, மார்க்கண்டேயர் முதலிய முனிவர்களால் தொடர்ந்து துதிக்கப்பட்டு, அடியார்கள் விரும்பும் பலன்களை அளிப்பவரும், அனைத்துப் பொருட்களையும் அறியும் பேரறிவுடையவரும் சரஸ்வதி யோடு கூடியவரும் உலகத் தலைவருமான நான்முகனைக் கண்டு, நாரத முனிவர் கீழே விழுந்து வணங்கித் தன் உளமார்ந்த பக்தியினால் அவரை மகிழ்வுறச் செய்தார். அப்போது, தான்தோன்றியான பிரும்மா, திருமால் அடியார்களில் சிறந்தவரான முனிவரைப் பார்த்து மகிழ்ந்து கூறினார் : "முனிவரே, நீர் ஏதோ கேட்க விரும்புகிறீர் (என்று நினைக்கிறேன்). (கேளும்) நான் பதில் சொல்லுகிறேன். (தொடரும்….)

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்